(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.205/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.1 (LW.1 )

| | | |
|---|---|---|
| Name | : | சதீஷ் |
| Father's/Husband Name | : | கந்தசாமி |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | லோடுமேன் |
| Age | : | 26 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **17.06.2026.**

**முதல் விசாரணை:–**

1) விபத்தில் இறந்துபோன கந்தசாமி எனது அப்பா ஆவார். கடந்த 16.08.2024–ம் தேதி இரவு சுமார் 7.45 மணியளவில் எனது அப்பா TCMS–ல் வேலை முடித்துக்கொண்டு அவரது சைக்கிளில் வீட்டிற்கு வருவதற்காக சேலம் ரோட்டில் வந்துகொண்டிருந்தபோது திருச்செங்கோடு பக்கமிருந்து வந்த பைக் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது மாமா ராஜ்குமார் எனக்கு போன்மூலம் தகவல் கூறினார். நான் தகவல் கேள்விப்பட்டு நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது அவர் மயக்க நிலையில் இருந்தார். பின்னர் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அவர் சிகிச்சை பலனளிக்காமல் அவர் அன்றையதினமே இறந்துவிட்டார். இதுசம்பந்தமாக காவல் நிலையம் சென்று

நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் திருச்செங்கோடு அரசு மருத்துவமனை சவகிடங்கு முன்பு வைக்கப்பட்டிருந்த எனது அப்பாவின் பிரேதத்தின்மீது போலீசார் பிரேத விசாரணை மேற்கொண்டார்கள். அதற்கு சாட்சியாக நான் உடன் இருந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:–

சம்பவம் நடந்த தேதி 16.08.2024 என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்று 17.08.2024–ம் தேதி ஒரு நாள் காலதாமதமாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் யாருடைய அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**:– இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 20:17:33 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.205/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.2 (LW.2 )

| | | |
|---|---|---|
| Name | : | ராஜ்குமார் |
| Father's/Husband Name | : | அன்பு |
| Village | : | மல்லசமுத்திரம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | லோடுமேன் |
| Age | : | 36 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **17.06.2026.**

**முதல் விசாரணை:-**

1) விபத்தில் இறந்துபோன கந்தசாமி எனது மாமா ஆவார். நானும் எனது மாமா கந்தசாமியும் TCMS-ல் லோடு மேன் ஆக வேலைசெய்துவந்தோம். கடந்த 16.08.2024-ம் தேதி இரவு சுமார் 7.45 மணியளவில் நான் உள்ளே வேலை செய்துகொண்டிருந்தபோது திடீரென ஒரு சத்தம்கேட்டது வெளியே வந்து பார்த்தபோது எனது மாமா மீது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. நான் சத்தம்கேட்டு தான் வந்து பார்த்தேன். அந்த சமயத்தில் நான் உள்ளே எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டிருந்தேன். சம்பவத்தை எனக்கு நேரடியாக தெரியாது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சம்பவத்தன்று எனது மாமா வேலை முடித்துக்கொண்டு அவரது மிதிவண்டியில் சேலம் To திருச்செங்கோடு செல்லும் சாலையில் கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டை கடந்தபோது திருச்செங்கோடு பக்கமிருந்து வந்த TN 52 K 6970 வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து எனது மாமா மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எனக்கு தெரிந்த காரணங்களுக்காக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:– இல்லை

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 20:17:43 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.205/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.3 (LW.3 )

| | | |
|---|---|---|
| Name | : | கார்த்திக் |
| Father's/Husband Name | : | கந்தன் |
| Village | : | மல்லசமுத்திரம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | போர்வெல்டிரைவர் |
| Age | : | 37 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **17.06.2026.**

**முதல் விசாரணை:-**

1) விபத்தில் இறந்துபோன கந்தசாமி எனது பக்கத்து வீட்டில் குடியிருப்பவர் ஆவார். கடந்த 16.08.2024-ம் தேதி இரவு சுமார் 7.45 மணியளவில் நான் என் வேலையை முடித்துக்கொண்டு வீட்டிற்கு செல்வதற்காக திருச்செங்கோட்டிலிருந்து சேலம் செல்லும் சாலையில் எனது இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது கந்தசாமி என்பவர் TCMS-ல் வேலை முடித்துக்கொண்டு சைக்கிளில் கேட்டிலிருந்து மல்லசமுத்திரம் பக்கமாக திரும்பியபோது TN 52 K 6970 Honda shine வாகனத்தின் ஓட்டுநர் அவர் மீது மோதிவிட்டார். நான் 200 மீட்டர் தொலைவில் சென்றுகொண்டிருந்தேன். சத்தம்கேட்டு தான் நான் திரும்பி பார்த்தேன். வந்து பார்த்தபோது அவருக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தது. மேற்படி விபத்து குறித்து

நான் அவரது மகனுக்கு தகவல் கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:– இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 20:17:53 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.205/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.4 (LW.6 )

| | | |
|---|---|---|
| Name | : | சபாபதி |
| Father's/Husband Name | : | பெருமாள் |
| Village | : | மல்லசமுத்திரம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | TCMS லோடுமேன் |
| Age | : | 38 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **17.06.2026.**

**முதல் விசாரணை:-**

1) என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை 17.08.2024-ம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் TCMS முன்பு நடந்த விபத்து சம்பந்தமாக போலீசார் வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார்செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும் முத்துசாமி என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-2**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

விபத்தில் இறந்துபோன கந்தசாமியும் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து நான்

எந்த கையெழுத்தும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்தபோன கந்தசாமி எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:– இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 20:18:03 +0530